நகல்

[5.8.1898] சொ. வேதாசலம்

நகல் – 1

திருச்சிற்றம்பலம்

சென்னை
ஆகஸ்டு 5

அன்புள்ள ஐயா!

உபய க்ஷேமம்

தாங்களிங்கே வந்திருந்தபோது, நான் கொடிய வயிற்றுளைவு நோயால் இயங்க வலியற்று வருந்திக் கொண்டிருந்தமையால், தங்களை வந்து காணுதற்கு நேராமற் போயிற்று. "மணிமேகலை" முற்றுப்பெற்றதும், பிறவும், ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியார் தெரிவிக்க மகிழ்வடைந்தேன். ஷ. சாஸ்திரியாருக்கும் நேற்று ஒரு காப்பி கிடைத்தது. எனது சம்பளம் செலவாய்ப் போன சமயமாயிருந்ததலால் இப்போது கைப்பணங் கொடுத்து ஷ. புத்தகம் வாங்குதற்குச் சக்தியற்றவனாயிருக்கிறேன். ஆதலால் தாங்கள் அன்புகூர்ந்து இப்போது ஒரு புத்தகம் உதவிசெய்தால் அதன் விலையை அடுத்த மாதத்தில் தங்களுக்கு அனுப்பிவிடுவேன்.

தங்கள் தேக சௌக்கியத்தை தெரிவிக்கும்படி வேண்டுகிறேன். தாங்கள் "அகநானூறு" பதிப்பித்தால் மிகவும் நலமுடையதாயிருக்கும். பிறர் பதிப்பதாயிருந்தால், தாங்கள் நற்றிணையாவது, உதயணன்கதையாவது பதிப்பித்தால் நன்று. தாங்கள் இனி பதிப்பித்தற்கு விரும்பி மேற்கொண்ட நூற்பெயர் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். நமஸ்காரம்

அடியேன்
சொ. வேதாசலம்
தமிழ்ப்பண்டிதன், கிறிஸ்டியன் காலேஜ்

நகல்

[5.8.1898] சொ. வேதாசலம்

S. Vedachalam,
5/8/98.

சொ. வேதாசலம்.

இதனை பதிப்பிக்கவேண்டும்.

11-9-10

Copied

45